

# கைப்பந்து பயிற்சியாளர்களுக்கான பயிற்சி முகாம்

## சென்னையில் தொடங்கியது

சென்னை, ஏப்.15–

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (எஸ்.டி.ஏ.டி.), தினத்தந்தி ஆதரவுடன் கைப்பந்து பயிற்சியாளர்களுக்கான (லெவல் 1) பயிற்சி முகாம் சென்னையில் உள்ள டாக்டர் சிவந்தி ஆதித்தன் சர்வதேச கைப்பந்து சம்மேளனத்தின் மண்டல மேம்பாட்டு மையத்தில் நேற்று தொடங்கியது. வருகிற 25–ந்தேதி வரை நடக்கும் இந்த முகாமில் 4 பெண்கள் உள்பட 36 பேர் பங்கேற்றுள்ளனர். இவர்கள் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் விளையாடியவர்கள். பிரனிஸ்லாவ் மோரோ (செர்பியா) முகாம் இயக்குனராகவும், தேசிய பயிற்சியாளர் ஸ்ரீதரன் ஆலோசகராகவும் செயல்படுகிறார்கள்.

இந்த முகாமை எஸ்.டி.ஏ.டி. உறுப்பினர் செயலாளர் ஷம்பு கலோலிகர் தொடங்கி வைத்தார். இந்திய கைப்பந்து சம்மேளனத்தின் தலைமை செயல் அதிகாரி கே.முருகன், ஆந்திர ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் புருசோத்தம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.